# உயர் தமிழ் (1147)

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

இப்பாடம் கற்பிக்கப்படுவதன் முக்கிய நோக்கம், ஏற்கெனவே மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். பின்வரும் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு:

### 1.1 கேட்டல்

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 1.2 பேசுதல்

- தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

### 1.3 படித்தல்

- பல வகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்
- பல வகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

### 1.4 எழுதுதல்

- கொடுக்கப்படும் கட்டுரை/கதைத் தலைப்புகளுக்கு ஏற்பத் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்

### 1.5 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- பல்வேறு தலைப்புகளில் தம் கருத்துகளையும், உணர்வுகளையும், நோக்குகளையும் சரளமாகவும் தெளிவாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் மின்னஞ்சல், வலைப்பூ, கருத்துக்களம் ஆகிய தலைப்புகளைப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்பத் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

இப்பாடம் மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**<u>வினாத்தாள் 1</u>:**
**(2 மணி நேரம், மதிப்பளவு - 80 மதிப்பெண்கள், 40%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’ என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (மின்னஞ்சல், வலைப்பூ, கருத்துக்களம்)**

இப்பிரிவில் கொடுக்கப்படும் இரண்டு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 130 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதுதல் வேண்டும். உறவுமுறை அல்லது தொழில்முறை வடிவில் ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கட்டுரை)**

இப்பிரிவில் மூன்று கட்டுரைத் தலைப்புகள் இடம்பெற்றிருக்கும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுதல் வேண்டும்.

**<u>வினாத்தாள் 2</u>:**
**(1 மணி 45 நிமிடநேரம், மதிப்பளவு - 80 மதிப்பெண்கள், 40%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’, ‘ஈ’ ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல், பிழைதிருத்தம்)**

இப்பிரிவில் முன்னுணர்வுக் கருத்தறிதல், பிழை திருத்தம் ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். அவை அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

**‘ஆ’ பிரிவு (சொற்புணர்ச்சி)**

இப்பிரிவில் ஐந்து சொற்புணர்ச்சி வினாக்கள் கேட்கப்படும்.

**‘இ’ பிரிவு (சுயவிடை/ தெரிவுவிடைக் கருத்தறிதல் மற்றும் சொற்பொருள்)**

இப்பிரிவில் இரண்டு கருத்தறிதல் பகுதிகள் இடம்பெறும். கருத்தறிதல் 1-இல் இரண்டு சுயவிடை வினாக்களும் இரண்டு தெரிவுவிடை வினாக்களும் கேட்கப்படும். மேலும் இப்பிரிவில் இடம்பெறும் மூன்று சொற்களுக்கு அல்லது சொற்றொடர்களுக்கு இடம்நோக்கிப் பொருள் கூறுதல் வேண்டும். கருத்தறிதல் 2-இல் நான்கு சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் எழுதுதல் வேண்டும்.

**‘ஈ’ பிரிவு – சுருக்கி வரைதல்**

இப்பிரிவில் கருத்தறிதல் 2-இல் இடம்பெற்றுள்ள சில பத்திகளைக் கருத்துப் பிறழாதவாறு 40 சொற்களுக்குள் சொந்த நடையில் சுருக்கி எழுதுதல் வேண்டும்.

**வினாத்தாள் 3:**
**(மதிப்பளவு- 40 மதிப்பெண்கள், 20%)**

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது. அவை வாய்மொழிப் படைப்பு, கருத்துரையாடல் என்பன.

**1 வாய்மொழிப் படைப்பு**

கொடுக்கப்படும் ஒளிக்காட்சி ஊக்கக்கூறையும் தலைப்பையும் பார்த்தபின் மாணவர் தம் படைப்பை 2 நிமிடங்களுக்கு மிகாமல் படைக்க வேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளைச் சிறந்த சான்றுகளுடன் விவரிக்கும் திறன், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2 கருத்துரையாடல்**

மாணவர் தாம் படைத்த படைப்பையொட்டித் தேர்வாளரோடு கருத்துரையாடலில் ஈடுபட வேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளைச் சிறந்த சான்றுகளுடன் விவரிக்கும் திறன், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## 3. தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு**
**உயர் தமிழ்**

| தாள்<br>(நேரம்) | பொருளடக்கம் | வினா<br>வகை | வினாக்களின்<br>எண்ணிக்கை | (மதிப்பளவு)<br>மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1 | **கட்டுரை** | | | (40%) |
| | **'அ' பிரிவு**<br>(i) மின்னஞ்சல் / வலைப்பூ / கருத்துக்களம் எழுதுதல் (130 சொற்கள்) | சுயவிடை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 20/10% |
| (2 மணி) | **'ஆ' பிரிவு**<br>(ii) கட்டுரை (300 சொற்கள்) வகைகள்:<br>• நிகழ்வு<br>• வருணனை<br>• விளக்கம், தர்க்கம் (சிற்றுரை வடிவில் அமையலாம்) | சுயவிடை | 3<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 60/30% |
| 2 | **கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்** | | | (40%) |
| | **'அ' பிரிவு**<br>A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 10/5% |
| | A2 பிழை திருத்தம் | பிழைகளைத் திருத்தி எழுதுதல் | 5 | 10/5% |
| (1மணி 45 நிமி) | **'ஆ' பிரிவு**<br>B3 சொற்புணர்ச்சி | சுயவிடை | 5 | 10/5% |
| | **'இ' பிரிவு**<br>(கருத்தறிதல் 1)<br>C4 சுயவிடை/ தெரிவுவிடைக் கருத்தறிதல்/ பொருள் எழுதுதல் | சுயவிடை/ தெரிவுவிடை | 5 | 22/11% |
| | (கருத்தறிதல் 2)<br>C5 சுயவிடைக் கருத்தறிதல் | சுயவிடை | 4 | 16/8% |
| | **'ஈ' பிரிவு**<br>D6 சுருக்கி வரைதல் (கருத்தறிதல் 2-ஐ ஒட்டியது) | சுயவிடை | 1 | 12/6% |

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
| --- | --- | --- | --- | --- |
| 3 | **<u>வாய்மொழி</u>**<br>(வாய்மொழித் தேர்வு ஒளிக்காட்சி ஊக்கக்கூறையொட்டி அமையும்)<br>1 வாய்மொழிப் படைப்பு<br>2 கருத்துரையாடல் | சுயவிடை | <br><br>1<br>1 | (20%)<br><br>20/10%<br>20/10% |